**இலங்கை டென்னிஸ் சங்கம - 2022**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை டென்னிஸ் சங்கத்தின் (''சங்கம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமான செலவுக் கூற்று, திரண்ட நிதியங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சங்கத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்;

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்தின் எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டிலிருந்து முன்னைய மதிப்பீடு வேறுபட்டதாக இருப்பின் அந்த மாற்றம் கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள் மீதான கணககீட்டு கொள்கைகளில் மாற்றம் தொடர்பான கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் கீழ் சீராக்கப்படல் வேண்டும். இருப்பினும் 2022 ஜனவரி 01 இல் முழுமையாக தேய்மானம் செய்யப்படடிருந்த சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுடன் கூடிய ரூபா 35,116,887 கிரயமான பொருட்களுக்கு மேறபடி கணக்கீட்டு நியமம் பிரயோகிக்கப்படவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கின்றதுடன் இந்த சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டுள்ளமையால் , 2023 முதல் நிதிக்கூற்றுக்களில் ஒவ்வொரு தனிப்பட்ட சொத்துக்கும் ரூபா 1 முன் கொண்டுவரப்படும்.. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டென்னிஸ் சங்கம் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் , கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய குத்தகை வாடகைத் தொகை ரூபா 39,195,143 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 18,975,000 ஆக காட்டப்பட்டிருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் ரூபா 20,220,143 ஆல் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மிகை அதே அளவினால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டிருந்தது. | கொழும்பு மாநகர சபைக்கும் இலங்கை டென்னிஸ் சங்கத்துக்கும் இடையில் ஒப்பந்தம் இல்லாததாலும், கொழும்பு மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய தொகை சர்ச்சைக்குட்பட்டிருந்ததாலும் இந்த தொகை நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியான செலுத்த வேண்டிய மீதிகள் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கு கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு செய்வதற்கு நிதிக்குழ தீர்மானித்துள்ளது. | கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெற வேண்டிய குத்தகை வாடகை | 6,440,328 | இரு தரப்பினருக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட உரிய ஒப்பந்தங்கள் | இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக இலங்கை டென்னிஸ் சங்கத்தின் விளையாட்டுப் பிரிவுடன் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு குழு தீர்மானித்துள்ளது. | கொழும்பு மாநகர சபையுடன் குத்தகை வாடகைக்கான ஒப்பந்தங்களை தயாரிப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வெண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 வருடத்திற்கும் மேற்பட்ட நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 3,132,229 பெறுமதியான பெற வேண்டியவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபா 16,384,685 பெற வேண்டிய நிலுவைகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 01 வருடத்திற்கும் மேற்பட்ட பெற வேண்டிய நிலுவைகளை அறவிடுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 01 வருடத்திற்கும் மேற்பட்ட நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 922,791 பெறுமதியான சட்டரீதியான கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ரூபா 3,412,829 செலுத்த வேண்டிய நிலுவைகள் தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 01 வருடத்திற்கும் மேற்பட்ட செலுத்த வேண்டிய நிலுவைகளை தீர்ப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுக்கள் சட்டத்தின் 7(xi) ஆம் பந்தி மற்றும் பகுதி (iii) இன் 7(xii) ஆம் பந்தி | ஆளுநர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கடவில்லை. | கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை அடுத்த ஆண்டில் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை நாம் எடுப்போம். த | நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னர் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை தயாரிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,932,497 ஆன மிகையாகஇருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 7,719,323 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 20,651,820 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவுகள் ரூபா 74,682,295 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 95,000,762 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 31,287,542 ஆன நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியானது நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உருப்படி வாரியாக நாளதுவரையாக்கப்படாததுடன், சங்கம் மீளாய்வாண்டில் பொருள் மெய்மையாய்வையும் நடாத்தவில்லை. | இலங்கை டென்னிஸ் சங்கம் 2012 வரை நிலையான சொத்துப் பதிவேடொன்றை பராமரிக்கவில்லை. இந்த ஆண்டில் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நாம் தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |